**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 09.05.2025** **நேரம் மாலை 6.20 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

வடக்கு மற்றும் மேற்கிந்திய நகரங்களை குறி வைக்க, நேற்று இரவு பாகிஸ்தான் மேற்கொண்ட எல்லா முயற்சிகளையும், இந்திய பாதுகாப்புப் படைகள் வெற்றிகரமாக முறியடித்துள்ளன.

தேசிய பாதுகாப்பு நிலவரங்கள் மாறி வரும் நிலையில், நாடு முழுவதும் மக்களுக்கான சேவைகள் தடையின்றி செயல்படுவதை உறுதிப்படுத்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

பாகிஸ்தானின் பொய்ப் பிரசாரங்கள் தொடர்வதால், பொது மக்கள் தங்களுக்கு வந்து சேரும் தகவல்களை, முழுமையாக ஆராய்ந்த பின்னரே நம்ப வேண்டும் என, அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

புதுச்சேரியில் கம்பன் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் கம்பன் விழாவை, இன்று துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.

---

*முறியடிப்பு 1 (18)*

ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம், வடக்கு மற்றும் மேற்கிந்திய நகரங்களை குறி வைக்க, நேற்று இரவு பாகிஸ்தான் மேற்கொண்ட எல்லா முயற்சிகளையும், இந்திய பாதுகாப்புப் படைகள் வெற்றிகரமாக முறியடித்துள்ளன. பத்தின்டா ராணுவ நிலையத்தை, ஆயுதம் தாங்கிய ஆளில்லா குட்டி விமானம் மூலம் குறி வைக்க, பாகிஸ்தான் முயன்றதாகவும், தங்தார், பூஞ்ச், ரஜோரி, அக்னூர், மற்றும், உத்தம்பூர் பகுதிகளில், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் குறுக்கே,

பீரங்கித் தாக்குதல்களில், பாகிஸ்தான் ஈடுபட்டதாகவும், கர்னல் சோஃபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர், இன்று மாலை புதுடெல்லியில், செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தனர். இந்தியப் படைகளின் பதிலடி தாக்குதல்களில், பாகிஸ்தான் ராணுவத்திற்கு பெருமளவு சேதங்கள் ஏற்பட்டதாகவும் இவர்கள் கூறினர். மே 7ஆம் தேதி பாகிஸ்தான், சிவில் வான் பரப்பை மூடவில்லை என்றும், சிவில் விமானங்களை கேடயமாகவே பயன்படுத்தி வருவதாகவும் இவர்கள் தெரிவித்தனர். இத்தாக்குதல்களில் ஈடுபட்டதை பாகிஸ்தான் மறுப்பது, அதன் இரண்டகத் தன்மைக்கு சான்றாகும் என்று வெளியுறவுச் செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். மதத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை என பாகிஸ்தான்

*முறியடிப்பு* 2 (12)

கூறுவதையும், அவர் வன்மையாக மறுத்தார். நம் நகரங்களை நாமே தாக்கியது போல பாகிஸ்தான் பேசுவது, பாகிஸ்தானுக்கு மட்டுமே வரக்கூடிய, நிலை குலைந்த கற்பனை என்று அவர் குறிப்பிட்டார்.

ஜம்மு-காஷ்மீரின் சம்பா மாவட்டத்தில் நேற்றிரவு, பெரிய அளவிலான ஊடுருவல் முயற்சி ஒன்றையும், பாதுகாப்புப் படையினர் வெற்றிகரமாக முறியடித்து, குறைந்தபட்சம் 7 தீவிரவாதிகளை சுட்டுக் கொன்றுள்ளனர். பஞ்சாப்பிலும், பதான்கோட், ஜலந்தர், அம்ரித்சர், மற்றும், பத்தின்டா பகுதிகளில், நேற்றிரவு தீவிரவாதிகளின் பல்வேறு ஊடுருவல் முயற்சிகளை, பாதுகாப்புப் படையினர் முறியடித்துள்ளனர். ஜம்மு பகுதியை மேலிருந்த பார்க்கையில், இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலை போலவே நிலவரங்கள் தென்படுவதால், பாகிஸ்தான் துருப்புகள், தீவிரவாத அமைப்புகள் போலவே செயல்படுவது, உறுதியாகி உள்ளது.

-------------------------

*ராஜ்நாத் சிங்* (9)

மேற்கு எல்லைப் பகுதிகளின் பாதுகாப்பு நிலவரங்கள், மற்றும், இந்திய பாதுகாப்புப் படைகளின் செயல்பாட்டு தயார் நிலை குறித்து, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று புதுடெல்லியில், முப்படைத் தலைவர்கள், மற்றும், பாதுகாப்புத் துறைச் செயலருடன்,

உயர்நிலை மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா-வும், எல்லைப் பாதுகாப்புப் படை, தொழிலக பாதுகாப்புப் படை, மற்றும், சிவில் விமான போக்குவரத்து தொடர்பான, பாதுகாப்பு அமைப்பின் தலைமை இயக்குநர்களுடன் கூட்டம் நடத்தி, நிலவரங்களை மறு ஆய்வு செய்தார்.

-------------------------

*பொய்ப் பிரச்சாரம் 1 (7)*

தீவிரவாதிகளுக்கு எதிராக இந்தியப் படைகள் நடத்தும் தாக்குதலால், பாகிஸ்தான் நிலை குலைந்து, பொய்த் தகவல் மற்றும் போலிச் செய்திகளை பரப்பி வருகிறது. சர்வதேச அளவில், தர்மசங்கடமான சூழ்நிலையை சந்தித்த பின்னரும், பாகிஸ்தான், இந்தியாவின் நற்பெயரை குலைக்கும் போக்கை போக்கை மாற்றிக் கொள்ளாமல், தாங்கள் வீரமாக பதிலடி கொடுத்தது போலவும், அபார வெற்றிகளை ஈட்டியது போலவும், ஜோடிக்கப்பட்ட கதைகளை, வெளியிட்டு வருகிறது இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*பொய்ப் பிரச்சாரம்* 2 (17)

**(வாய்ஸ்)**

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில், இந்திய நிலை ஒன்றை பாகிஸ்தான் துருப்புக்கள் தாக்கி அழித்தது போல, போலி வீடியோ ஒன்றை அந்நாடு பரப்பி வருகின்ற போதிலும், அவர்கள் குறிப்பிடும் பெயரில் அப்படியொரு ராணுவ நிலை இருக்கவும் இல்லை, இருந்ததும் இல்லை. ஜம்மு விமானப் படை தளத்தை, வெடிகுண்டு வீசித் தாக்கியதாகக் கூறி, பாகிஸ்தான் வெளியிட்டுள்ள மற்றொரு படம், 2021ஆம் ஆண்டு, காபூல் விமான நிலையத்தில் குண்டு வெடித்த போது எடுக்கப்பட்ட படம் என்றும், குஜராத் மாநிலம் ஹாசிரா துறைமுகம் தாக்கப்பட்டது போல பாகிஸ்தான் வெளியிட்டுள்ள வீடியோ, எண்ணெய்க் கப்பல் விபத்து தொடர்பான பழைய வீடியோ என்றும், தெரிய வந்துள்ளது. இந்தியாவிற்கு எதிரான பாகிஸ்தானின் பொய்ப் பிரசாரங்கள் தொடர்வதால், பொது மக்கள் தங்களுக்கு வந்து சேரும் தகவல்களை, முழுமையாக விசாரித்த பின்னரே நம்ப வேண்டும் என்றும், இந்திய பாதுகாப்புப் படைகள் தொடர்பாக சந்தேகத்திற்கு இடமான செய்திகள், மற்றும் படங்களை சந்திக்க நேர்தால், பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை அறியும் பிரிவை, 87 997 11 259 என்ற வாட்ஸ் அப் எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றும், கேட்டுக் கொள்ளப் படுகிறது.

------------------------

போப்-மோடி (10)

புதிய போப்பாண்டவரின் அறிவிக்கப் பட்டுள்ள, போப் 14ஆம் லியோவிற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்திய மக்களின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டுள்ளார். அமைதி, நல்லிணக்கம், ஒற்றுமை, மற்றும், சேவை உணர்வின் பரவலுக்கு முக்கியத்துவம் அதிகமுள்ள தருணத்தில், கத்தோலிக்கத் திருசபையின் தலைமை பொறுப்பை 14ஆம் லியோ போப்பாண்டவர் ஏற்பதாக, சமூக ஊடகப் பதிவில் பிரதமர் கூறியுள்ளார். பேச்சு வார்த்தைகள், மற்றும் ஆலோசனைகள் மூலம், பொதுவான மாண்புகளை மேலும் முன்னெடுத்துச் செல்வதில், போப்பாண்டவருடன் ஒருங்கிணைந்து செயல்பட, இந்தியா உறுதிப்பாடு கொண்டுள்ளதாக, அவர் மேலும் கூறியுள்ளார்.

-------------------------

அத்தியாவசிய சேவை (18)

தேசிய பாதுகாப்பு நிலவரங்களில், அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் பின்னணியில், நாடு முழுவதும் மக்களுக்கான சேவைகள் தடையின்றி செயல்படுவதை உறுதிப்படுத்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கென பல்வேறு அமைச்சகங்கள், மற்றும் துறைகள், ஒருங்கிணைந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. மத்திய சுகாதாரஅமைச்சர் திரு. ஜே.பி நட்டா, சுகாதாரக் கட்டமைப்பின் தயார் நிலை குறித்து, இன்று மூத்த அதிகாரிகளுடன் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் சைபர் பாதுகாப்புத் தயார் நிலை குறித்து, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன், இன்று மாலை மறு ஆய்வுக் கூட்டம் நடத்துகிறார். ஏடிஎம் இயந்திரங்கள் மற்றும் இதர டிஜிட்டல் சேவைகள், வழக்கம் போல் மக்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு, பொதுத் துறை வங்கிகளுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப் பட்டுள்ளது. நாட்டில், போதிய அளவில் எரிபொருள் கையிருப்பு இருப்பதாகவும், எண்ணெய்- எரிவாயு வினியோக வசதிகள், சமூகமான முறையில் செயல்பட்டு வருவதாகவும், இண்டியன் ஆயில் நிறுவனம் தெரிவித்துள்ளது. அனைவருக்கும் தடையின்றி எரிபொருள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதால், பொது மக்கள் அவசரமாக எரிபொருள் வாங்கி வைக்கத் தேவையில்லை என்றும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

-------------------------

*கம்பன் விழா 1 (7)*

புதுச்சேரியில் கம்பன் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் கம்பன் விழாவை, இன்று துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார். கம்பன் காட்டிய வழியில், நல்லொழுக்கம், நீதி, ஒற்றுமை மற்றும் சமத்துவத்தை, வாழ்க்கையில் அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என அவர் தமது உரையில் கூறினார். மனித சமுதாயத்தின் நடப்பு சிக்கல்களுக்கு, கம்ப ராமாயணத்தில் தீர்வுகள் இருப்பதாகவும், அவர் கூறினார். துணை நிலை ஆளுநர் உரையில் இருந்து ஒரு பகுதி....

**(வாய்ஸ்)**

*கம்பன் விழா 2 (2)*

புதுச்சேரி கம்பன் கழகத்தினர், தொடர்ந்து 58 ஆண்டுகளாக, கம்பன் விழா நடத்தி வருவதை முதலமைச்சர் திரு. ரங்கசாமி, வரவேற்றுபுரையில், பாராட்டினார்....

**(வாய்ஸ்)**

*கம்பன் விழா* 3 (5)

முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியும், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவருமான திரு. ராமசுப்ரமணியன், கம்பன் விழாவின் தொடக்க விழாவிற்கு தலைமையேற்று பேசுகையில், உலகின் பல்வேறு நாடுகளில் வழங்கப்பெறும் ராமாயணங்களில், கம்ப ராமாயணமே மிகச் சிறந்த காவியமாக கொண்டாடப் படுவதாகக் கூறினார்....

(வாய்ஸ்)

*கம்பன் விழா 4 (8)*

கம்பன் விழாவின் தொடக்க விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், விழா மலரை வெளியிட்டு, தமிழ் புலவர்களுக்கு நினைவு பரிசு வழங்கினார். மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், கம்பன் ஆய்வு நூலை வெளியிட்டார். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு, பரிசுகளும் வழங்கப்பட்டன. கம்பன் கலையரங்கில் நடைபெறும் இந்த 3 நாள் கம்பன் விழாவில், புகழ்பெற்ற தமிழ் அறிஞர்களின் பங்கேற்புடன், கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

-------------------------

*ஐபிஎல் (10)*

நடப்பு ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் எஞ்சிய போட்டிகள், ஒருவார காலத்திற்கு ஒத்தி வைக்கப் படுவதாக, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது. காஷ்மீர் பகுதியில், எல்லை தாண்டிய தாக்குதல்களை தொடர்ந்து, இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே, ராணுவப் பதற்றம் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, இம்முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது. நிலவரங்களை முழுமையாக மதிப்பீடு செய்த பின்னர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மற்றும், அனைத்துத் தரப்பினரின் ஆலோசனை அடிப்படையில், எஞ்சிய ஐபிஎல் போட்டிகளுக்கான, திருத்தப்பட்ட கால அட்டவணை அறிவிக்கப்படும் என்றும், கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

-------------------------

*ஸ்டாலின் (19)*

தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டுள்ள இந்திய ராணுவத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், சென்னையில் நாளை நடைபெற உள்ள பேரணிக்கு, தமிழக முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் தலைமை ஏற்கிறார். பாகிஸ்தானிய அத்துமீறல்களுக்கு எதிராக, தீரமுடன் செயல்பட்டு வரும் இந்திய ராணுவத்திற்கு, ஆதரவு வெளிப்படுத்த வேண்டிய தருணம் இது என்று, சென்னையில் இன்று வெளியிட்டுள்ள

அறிக்கை ஒன்றில் அவர் கூறியுள்ளார். நாளை மாலை 5 மணிக்கு, சென்னையில், காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம் முதல், போர் நினைவகம் வரை நடைபெற உள்ள இப்பேரணியில், மாநில அமைச்சர்கள், முன்னாள் ராணுவத்தினர், மாணவர்கள், மற்றும், ஏராளமான பொது மக்களும் பங்கேற்க உள்ளனர். பொது மக்கள் அனைவரும், இந்திய ராணுவத்திற்கு ஆதரவு வெளிப்படுத்த வேண்டும் என்றும் தமிழக முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கிடையே, இந்திய ராணுவத்திற்கு ஆதரவாக, பெங்களூரில் இன்று முக்கிய பகுதிகளில் நடைபெற்ற மூவர்ணக் கொடி ஊர்வலங்களை, கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமய்யா, துணை முதலமைச்சர் திரு. சிவக்குமார் ஆகியோர் தொடக்கி வைத்தனர். இந்திய ராணுவத்தினரின் பாதுகாப்பை வேண்டி, மாநிலத்தில் பல்வேறு கோவில்கள் மற்றும் பள்ளிவாசல்களில் சிறப்பு பிரார்த்தனைகள் மற்றும் தொழுகைகள் நடைபெற்றதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

வடக்கு மற்றும் மேற்கிந்திய நகரங்களை குறி வைக்க, நேற்று இரவு பாகிஸ்தான் மேற்கொண்ட எல்லா முயற்சிகளையும், இந்திய பாதுகாப்புப் படைகள் வெற்றிகரமாக முறியடித்துள்ளன.

தேசிய பாதுகாப்பு நிலவரங்கள் மாறி வரும் நிலையில், நாடு முழுவதும் மக்களுக்கான சேவைகள் தடையின்றி செயல்படுவதை உறுதிப்படுத்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

பாகிஸ்தானின் பொய்ப் பிரசாரங்கள் தொடர்வதால், பொது மக்கள் தங்களுக்கு வந்து சேரும் தகவல்களை, முழுமையாக ஆராய்ந்த பின்னரே நம்ப வேண்டும் என, அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

புதுச்சேரியில் கம்பன் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் கம்பன் விழாவை, இன்று துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.